# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 139/ந/2024

நாள்: 27.11.2024

திரு. கி. பிரகாஷ்குமார்,
காவேரி நகர், மேட்டூர் அணை,
சேலம் மாவட்டம். ... முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
மேட்டூர் நகராட்சி. சேலம் மாவட்டம். ... எதிர்மனுதாரர்

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் அணை, காவேரி நகர், மரியா இல்லம், க.எண்.21/61, என்ற முகவரியை சேர்ந்த திரு. கி. பிரகாஷ்குமார், என்பவரது 16.09.2023 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.09.2023 அன்று பெறப்பட்டு, 139/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் அணை, காவேரி நகர், மரியா இல்லம், க.எண்.21/61, என்ற முகவரியை சேர்ந்த திரு. கி. பிரகாஷ்குமார், என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நான் 90% பார்வை குறைபாடுடைய ஒரு மாற்று திறனாளி ஆவேன். சேலம் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரின் அரசு கடிதத்தின்படி மாண்பமை தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110ன் கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமை சட்டத்தின்கீழ் பயன்பெறும் பொருட்டு மேட்டூரில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் மாண்பமை நகராட்சி நிர்வாக துறை அமைச்சரிடம் ஆவின் பாலகம் அமைக்க வேண்டி மனு வழங்கியிருந்தேன்.

2) சேலம் மாவட்ட மாற்று திறனாளிகள் நல அலுவலரால் பரிந்துரை செய்து மேற்படி அரசு கடிதத்தின் வாயிலாக உரிய பரிந்துரைகள் சேலம் ஆவின் நிர்வாக இயக்குனருக்கு வழங்கப்பட்டுள்ளது.

3) இந்நிலையில் மேட்டூர் நகராட்சி ஆணையரின் கடிதத்தில் ஆவின் பாலகம் அமைக்க காமத் பூங்கா அருகில் இடம் கோரி விண்ணப்பித்து இருந்த நிலையில் கூட்ட நெரிசலின் காரணமாக இடம் வழங்க இயலவில்லை என்ற குறிப்புடன் மனு ஆவின் நிறுவனத்திற்கு மாற்றம் செய்து அனுப்பப்பட்டு இருந்தது. மீண்டும் நகராட்சி ஆணையரிடம் மேட்டூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அருகில் (RTO Office) மாற்று இடம் வழங்க வேண்டுமாறு 11.10.2022 அன்று மனு அனுப்பப்பட்டது.

4) அரசு கடிதங்களின் மூலம் மாற்றுத் திறனாளியாகிய என்னை அழைக்கழித்து மனஉளைச்சலை ஏற்படுத்தி எனக்கு ஆவின் பாலகம் அமைக்க எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. உயர்திரு சேலம் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் 14.08.2023 அன்று மனுநீதி மூகாமில் மனு கொடுக்கப்பட்டு, புகார் ஏற்பு எண். TN/ MAWS/SLM/1/COLLMGDP/14AUG2023/5992830 வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் நகராட்சியின் துறை சார்ந்த அதிகாரிகள் என்னிடத்தில் துர்லாபம் அடையும் பொருட்டு என்னை அலைக்கழித்து இது வரை இடம் வழங்க மறுக்கின்றனர். ஆனால் பிரதிபலன் வழங்குகின்ற கடைக்காரர்களுக்கு நான் கோரிய அதே இடத்தில் இடம் வழங்கியுள்ளனர் அதற்கான புகைப்பட ஆதாரங்கள் இம்மனுவோடு இணைக்கப்பட்டுள்ளது.

எனவே எனது விண்ணப்பத்தை ஏற்று எனக்கு ஆவின் பாலகம் அமைக்க ஏதாவது ஒரு இடத்தில் இடம் வழங்க உத்தரவு வழங்க வேண்டுமாறும் கெட்ட எண்ணத்தோடு அலைக்கழித்த எதிர்மனுதாரர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு உரிய இழப்பீடு வழங்க உத்திரவிட வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்" எனக்கோரியுள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.01.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3) சேலம், மேட்டூர் நகராட்சி ஆணையர் தனது 24.09.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-**

" மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மாற்றுத்திறனாளிகள் ஆவின் பங்க் ஸ்டால் அமைக்க திரு. பிரகாஷ் குமார் என்பவர் விண்ணப்பித்துள்ள இடத்தில் நகராட்சி அறிவுசார் மையம் கட்டுமான பணி நடைபெற்று வருவதால் திரு. பிரகாஷ் குமார் அவர்களை மாற்று இடம் தெரிவிக்க ஆவின் மேலாளர் ஒப்புதல் கடிதத்துடன் தெரிவிக்க கோரப்பட்டது. மனுதாரர் மாற்று இடம் தேர்வு செய்ய 7 நாட்கள் அவகாசம் கோரி 16.02.2024 அன்று கடிதம் வழங்கியுள்ளார். இதுநாள் வரை மாற்று இடம் மனுதாரரால் தெரிவிக்கப்படவில்லை. அவர் கோரும் இடம் நகராட்சிக்குட்பட்ட இடமாக இருக்கும் பட்சத்தில் ஆவின் பால் மேலாளரின் ஆவின் பாலகம் வைப்பதற்கான ஒப்புதல் கடிதம்

மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரை கடிதம் வழங்கும்போது ஆவின் பாலகம் அமைக்க வழிவகை செய்து தரப்படும்"என தெரிவித்துள்ளார்

4) மனுதாரரும் மற்றும் மேட்டூர் நகராட்சி ஆணையரும் 09.10.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.09.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. பிரகாஷ் குமார், 09.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை. இவரது 07.10.2024 நாளிட்ட கடிதத்தில் தான் 90% பார்வை குறைபாடுள்ள மாற்றுத்திறனாளி, தன்னால் சாலைகளை கடந்து சென்னையில் ஆஜராக இயலாததால் மன்னிக்குமாறும், அஞ்சல் மூலம் அனுப்பி உள்ள எழுத்து பூர்வ வாதுரையை ஏற்று உத்திரவிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

6) எதிர்மனுதாரரான மேட்டூர் நகராட்சி ஆணையர் சார்பில் மேட்டூர் நகராட்சி நகரமைப்பு அலுவலராகப் பணிபுரியும் நிர்மலாதேவி என்பவர் 09.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆவின் பங்க் ஸ்டால் அமைக்க திரு.பிரகாஷ்குமார் என்பவர் விண்ணப்பித்துள்ள இடத்தில் நகராட்சி அறிவுசார் மையம் கட்டுமான பணி நடைபெற்று வருவதால் மாற்று இடம் தெரிவிக்க கோரப்பட்டது. மனுதாரர் மாற்று இடம் தேர்வு செய்ய 7 நாட்கள் அவகாசம் கோரி 16.02.2024 அன்று கடிதம் வழங்கியுள்ளார். இதுநாள் வரை மாற்று இடம் மனுதாரரால் தெரிவிக்கப்படவில்லை. மேலும் 18.09.2024 தேதியிட்ட கடிதத்தில் ஆவின் பால் மேலாளரின் ஒப்புதல் பெற்று மாற்று இடம் தெரிவிக்குமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்பட்டது. மனுதாரர் கோரும் இடம் நகராட்சிக்குட்பட்ட இடமாக இருக்கும்பட்சத்தில் ஆவின் பால் மேலாளரின் ஒப்புதல் கடிதம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரை கடிதத்தின் அடிப்படையில் ஆவின் பாலகம் அமைக்க வழிவகை செய்து தரப்படும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

நேரடி விசாரணையின் போது 24.09.2024 நாளிட்ட மேட்டூர் நகராட்சி ஆணையாளரின் கடிதத்தினை சமர்ப்பித்து அதில் தெரிவித்துள்ள விவரங்களை மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, அஞ்சல் மூலம் பெறப்பட்ட வாதுரை, மேட்டூர் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை மற்றும் மேட்டூர் நகராட்சி நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரரின் புகார் மனுவில் தான் 90% பார்வை குறைபாடுடைய ஒரு மாற்று திறனாளி எனவும், மேட்டூர் நகராட்சி ஆணையரின் கடிதத்தில் ஆவின் பாலகம் அமைக்க காமத் பூங்கா அருகில் இடம் கோரி விண்ணப்பித்து இருந்த நிலையில் கூட்ட நெரிசலின்

காரணமாக இடம் வழங்க இயலவில்லை என்ற குறிப்புடன் மனு ஆவின் நிறுவனத்திற்கு மாற்றம் செய்து அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் நகராட்சி ஆணையரிடம் மேட்டூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அருகில் (RTO Office) மாற்று இடம் வழங்க வேண்டுமாறு 11.10.2022 அன்று மனு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார், மேலும் மாற்றுத் திறனாளியாகிய தன்னை அலைக்கழித்து மனஉளைச்சலை ஏற்படுத்தி தனக்கு ஆவின் பாலகம் அமைக்க எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் இடம் வழங்காமல், தான் கோரிய அதே இடத்தில் பலருக்கு இடம் வழங்கியுள்ளதாக தெரிவித்து, தனது விண்ணப்பத்தை ஏற்று ஆவின் பாலகம் அமைக்க ஏதாவது ஒரு இடத்தில் இடம் வழங்க உத்தரவு வழங்க வேண்டுமாறு" கேட்டுக்கொண்டுள்ளார்.

மேட்டூர் நகராட்சி ஆணையர், மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆவின் பங்க் ஸ்டால் அமைக்க மனுதாரரால் விண்ணபித்துள்ள இடத்தில் நகராட்சி அறிவுசார் மையம் கட்டுமான பணி நடைபெற்று வருவதால் மாற்று இடம் தெரிவிக்க கோரப்பட்டதாகவும், மனுதாரர் கோரும் இடம் நகராட்சிக்குட்பட்ட இடமாக இருக்கும்பட்சத்தில் ஆவின் பால் மேலாளரின் ஒப்புதல் கடிதம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரை கடிதம் வழங்கும்பட்சத்தில் ஆவின் பாலகம் அமைக்க வழிவகை செய்து தரப்படும் என்று தெரிவித்துள்ளார்.

மேட்டூர் நகராட்சி சார்பாக நகரமைப்பு அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு மனுதாரர் மாற்று இடம் கோரும்பட்சத்தில், மனுதாரர் ஒரு மாற்று திறனாளி என்பதை கருத்தில் கொண்டு, நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு அவரது கோரிக்கையினை நிறைவேற்ற அவரை நேரில் சந்தித்து விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்குமாறும் மேட்டூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2024–ஆம் ஆண்டு, நவம்பர் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. கி. பிரகாஷ்குமார்,
க.எண்.21/61, மரியா இல்லம்,
காவேரி நகர், பழைய முகவரி 32C,
முதல்தளம், சிவகாமி சுந்தரி மண்டபம்,
மேட்டூர் அணை, சேலம் மாவட்டம் – 636 401

2) ஆணையாளர்,
மேட்டூர் நகராட்சி,
சேலம் மாவட்டம்.

3) நகரமைப்பு ஆய்வாளர்,
மேட்டூர் நகராட்சி,
சேலம் மாவட்டம்.

4) நகராட்சிகளின்இயக்குநர்,
நகராட்சிகளின்இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)